# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106

தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282

மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in


## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு : 41 / 2021** **நாள்: 07.10.2021**

**28 மாவட்டங்களுக்கான ஊரக உள்ளாட்சி மறைமுகத் தேர்தல்கள் 2021 நடத்துவதற்கான செய்தி வெளியீடு**

காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய 9 மாவட்டங்களில் 22.10.2021–ல் மறைமுகத் தேர்தல்கள் நடைபெற உள்ளன. அதே நாளில் ஏனைய 28 மாவட்டங்களில் 30.06.2021 வரை நிரப்பப்படாத ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர், ஊராட்சி ஒன்றியக்குழு துணைத் தலைவர் மற்றும் கிராம ஊராட்சி துணைத் தலைவர் மற்றும் பதவி விலகல் காரணமாகவும், இறப்பின் காரணமாகவும் காலியிடம் ஏற்பட்டுள்ள மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர், ஊராட்சி ஒன்றியக்குழு துணைத் தலைவர் மற்றும் கிராம ஊராட்சி துணைத் தலைவர் ஆகிய பதவியிடங்களை நிரப்பிட மறைமுகத் தேர்தல் கூட்டத்தினை கூட்ட தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

காலியாக உள்ள பதவியிடங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | மாவட்ட ஊராட்சித் துணைத் தலைவர் | – | 4 |
| 2. | ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் | – | 6 |
| 3. | ஊராட்சி ஒன்றியக்குழு துணைத் தலைவர் | – | 13 |
| 4. | கிராம ஊராட்சி துணைத் தலைவர் | – | 107 |
| | மொத்தம் | – | 130 |

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

7/10/2021

மக்கள் தொடர்பு அலுவலர்